[1986 மே 3

பேருந்துகளைச் சுத்தப்படுத்த புதிய கருவிகள்.

* 223. வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள், தங்கள் பேருந்துகளைக் கழுவி சுத்தப்படுத்த, புதிய கருவிகளை வாங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத் திலுள்ள போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைக் கழுவி, அவற்றைச் சுத்தப்படுத்தும் பணிகளைப் பொறுத்தவரையில், திருப்திகரமாக இல்லை. நாம் பயணம் செய்யும்போது பார்க்கிறோம், பல வண்டிகள் மிகவும் அசுத்த மாக இருக்கின்றன. நவீன முறைகளில் கருவிகளைப் பயன்படுத்தினால் அசுத்தம் ஏற்படாது. இதை மேல் நாடுகளில் பயன்படுத்துகிறார்கள். அப்படி நம்முடைய நாட்டிலும் பயன்படுத்தக்கூடாதா என்று பொது மக்கள் பேசு கிறார்கள். எனவே வருங்காலத்திலாவது அந்த நவீனக் கருவிகளைப் பயன் படுத்த வழிமுறைகளை அரசு காணுமா ?

(முற்பகல் 10-05)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : கட்டணம் என்று வருகிறபோது, பொது மக்கள் அம்மாதிரிப் பேசுகிறார்களா ? வெளிநாட்டில் கட்டணம் அதிகம், இங்கே குறைவு, ஆகவே இங்கேயும் கட்டணத்தை அதிகமாக்க வேண்டும் என்று பேசுகிறார்களா ? அத்தகைய உணர்வு இங்கேயும் வரும்போது, நாமும் செய்யலாம். ஒரு கருவி வாங்க 2 லட்சம் ரூபாய் செலவாகிறது. சிக்கனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அம்மாதிரி முயற்சியை எடுக்க முடிய வில்லை. ஆனாலும் சில போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், அவர்களே தனியாக இதற்கான கருவிகளைத் தயார் செய்து பயன்படுத்தி வரு கிறார்கள். நம்மிடம் இருக்கிற வசதியைப் பயன்படுத்தி நாம் இப்படித்தான் செய்ய முடியும். இங்கிலாந்தில் இந்தக் கருவியின் விலைபற்றிக் கேட்டபோது, அது 2 லட்சம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை யில் நாம் இந்தக் கருவியை வாங்குவது நமக்குக் கஷ்டமாக இருக்கும் என்பதால்தான், அந்த ஆலோசனை கைவிடப்பட்டது.

1986 மே 3]

திரு. எல். ஜெயச்சந்திரன் : ஒரு வருடத்திற்கு முன்பு பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துத்தான், நான் இந்தக் கேள்வியைப் போட்டேன். ஆலோசனை கைவிடப்பட்டது என்று அமைச்சர் சொன்னார். இன்றைக்கு ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் 300 பேருந்துகளுக்கு மேல் இருக்கும் நிலையில், இரண்டு அல்லது மூன்று கருவிகளாவது வாங்கலாம் அல்லவா? இப்போது இல்லையென்றாலும், வருங்காலத்திலாவது ஒன்றிரண்டு கருவிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இரண்டு அல்லது மூன்று போதாது. ஒவ்வொரு டெப்போவுக்கும் ஒன்று வேண்டும். இப்போது கிட்டத்தட்ட 237 டெப்போக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு டெப்போவுக்கும் 2 லட்சம் ரூபாய் விதம் செலவு செய்து இக்கருவியை வாங்குவது என்பது இப்போதைய நிலையில் கஷ்டமான காரியம். ஆனாலும் இப்பொழுது கூட அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களே இத்தகைய கருவிகளைத் தயார் செய்து, பேருந்துகளைக் கழுவி, சுத்தப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்திலுள்ள கருவியைப் பொறுத்தவரையில், அதை இப்பொழுது வாங்குவதற்கான முயற்சி கைவிடப்பட்டதே தவிர, இந்த ஆலோசனை கைவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : புதிய கருவிகளை வாங்கி பயன்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு இழப்பு அதிகமாக இருக்கும் அல்லவா. அந்த அடிப்படையில் இந்த முயற்சி கைவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : எல்லாவற்றிலும் நாம் அப்படிப்பட்ட நிலையைக் கடைப்பிடித்தால் பேருந்துகளையே நிறுத்த வேண்டிய நிலை வந்துவிடும். அப்படிப் பார்த்தால், சிறிய வண்டிகளை நிறைய பேர் வைத்துக் கொண்டு பயன்படுத்துவார்கள். இதைப் பொறுத்தவரையில், இது தேவையான ஒன்று, பொதுமக்களுக்குப் பயன்படக் கூடிய ஒன்று. இதனால் வேலை இழப்பு ஒன்றும் ஏற்பட்டு விடாது. இது நல்ல பலன் தரக்கூடியது என்பதால், வேறு விதமாக இதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம்.